[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2008 ஏப்ரல் 28

கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இன்று காலையிலேகூட சொல்கிறேன். ஏனென்றால், Member (Distribution) அவர்களிடத்திலே தினந்தோறும் காலையிலே 6 மணிக்கு, இன்றையதினம் மின்சாரம் எவ்வளவு நமக்குத் தேவைப்படுகிறது, மின்சாரம் எவ்வளவு நம்மிடத்திலே கையிருப்பு இருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் கேட்டுத்தான் பொறுப்போடு நான் பதில் சொல்கிறேன். இன்று நமக்கு 1,200 மெகா வாட் காலையிலேயே காற்றாலைகள்மூலம் கிடைக்கின்ற மின்சாரம் கிடைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினாலே, தமிழகத்திலே காலையிலும் மின்தடை இருக்காது, பகலிலேயும் இருக்காது, இரவிலும் இருக்காது. நாளைக்கு என்னவென்று நாளைக்குத்தான் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) தமிழகத்தில் வழங்கியுள்ள குடும்ப அட்டைகளில் 1.66 இலட்சம் போலியானவை என்று எல்காட் நிறுவனம் தெரிவித்துள்ளதாக வந்த செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கிடு)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தந்திருக்கிற இந்த அனுமதியின்மூலம் தமிழகத்திலே இருக்கின்ற அடித்தட்டு மக்களை மிகவும் ஆழமாகப் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்சினை குறித்து இந்த அவையினுடைய கவனத்தையும் குறிப்பாக மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்தையும் ஈர்க்க நான் ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே இருக்கின்ற இரண்டு கோடி ரேஷன் கார்டுகள், இந்த இரண்டு கோடி ரேஷன் கார்டுகளை முறையாக வகைப்படுத்தி, இந்த ரேஷன் கார்டுகளுடைய தராதரத்தை அறிவதற்காக நம்முடைய அரசுக்குச் சொந்தமான எல்காட் நிறுவனம்மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை . . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய அறிவிப்பைத்தான் எடுக்கப்போகிறேன். நான் கூப்பிட்டதற்கு அப்புறம் நீங்கள் சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: சரி. (குறுக்கிடு)

(இ) பாலாற்றின் குறுக்கே குப்பம் அருகில் ஆந்திர அரசு அணை கட்டப்போவதாக வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? திரு. ஜி.கே. மணி.

2008 ஏப்ரல் 28]

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு குப்பத்தின் அருகில் அணை கட்டப் போவதாக அறிவிப்பு வந்திருக்கிறது. ஏற்கெனவே நீதிமன்றத்திலே தமிழக அரசு வழக்குத் தொடர்ந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட தொடர்ந்து அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் மீறி இப்போது அணை கட்டும் பணி துவங்கியிருப்பதாகத் தகவல் வருகிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேலுசாமி, உங்கள் இடத்திற்குப் போங்கள்.

திரு. ஜி.கே. மணி: அது தொடர்ந்தால் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட பாலாற்றில் வராமல் போய்விடும். ஆகவே, தமிழ்நாட்டினுடைய உரிமையைப் பாதுகாப்பதற்காக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா? அணை கட்டாமல் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு உறுப்பினர்கள் இதுசம்பந்தமாக அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லிவிட்டால், இப்போதே முடிந்துபோய்விடும். பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் நாம் வழக்கு தொடுத்தோம். உச்ச நீதிமன்றம், 'இதில் மத்திய அரசு தலையிட வேண்டும்' என்று சொன்னது. அதனடிப்படையில், மத்திய அரசினுடைய Central Water Commission-க்கு முன்னால், அவர்களுடைய அதிகாரிகளும், நம்முடைய அதிகாரிகளும், மற்றவர்களும் உட்கார்ந்து பேசினார்கள். அப்போது அவர்களுக்கு முன்னால் அந்த அணை கட்டுவதில் என்ன பிரச்சினை இருக்கிறது என்பது குறித்த எல்லா விவரங்களையும் மத்திய அரசின் கையிலே தரவேண்டும்; ஏன் நாம் எதிர்க்கிறோம் என்பதற்கான காரண, காரியங்களை நாம் அவர்களுக்குத் தரவேண்டும்; அதைச் சொல்லியிருக்கிறோம். ஆக, அந்த நிலையில்தான் இருக்கிறது. இடையிலே இப்படிப்பட்ட ஒரு செய்தி வந்திருக்கிறது. இது எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அரசு கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது. ஆகையினாலே, எல்லா நிலையிலும் உரிமையை விட்டுக் கொடுக்காமல் இருப்பதைப்போல், இப்படி வந்த செய்தியிலும் உரிமையை விட்டுக்கொடுக்காமல் நடந்து கொள்ளும். அப்படி இந்த

[திரு. துரைமுருகன்] [2008 ஏப்ரல் 28

ஒப்பந்தத்தை ஏதாவது மீறி, உச்ச நீதிமன்றத்தினுடைய அந்த ஆலோசனைக்குப் பிறகும், ஆந்திர அரசு ஈடுபடுமானால், அதை எந்தெந்த வகையிலே இந்த அரசு சந்திக்க வேண்டுமோ, அப்படிச் சந்திக்கும்.

(ஈ) கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த அன்பரசன் என்பவரை சிங்கள அரசும், அங்குள்ள காவல் துறையும் சித்ரவதை செய்து படுகொலை செய்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல்முருகன், என்ன? இந்த subject-ஆ அல்லது வேறு subject-ஆ?

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்கள் உலக நாடுகளில் எங்கு பிழைக்கப் போனாலும், விபத்துக்குள்ளாகி இறப்பது வாடிக்கை; நாம் அந்த உடலைக் கொண்டுவருவது வாடிக்கை; அரசு அதற்கான நடவடிக்கையை எடுக்கும். ஆனால், நேற்றைய முன்தினம் எங்கள் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த இளங்கோவன் என்பவரின் மகன் அன்பரசன் என்பவரைச் சிங்களப் பேரினவாத அரசும், அங்கிருக்கிற காவல் துறையும் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று, சித்ரவதைக்கு உள்ளாக்கி, அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்த சிங்களப் பேரின அரசு, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, தற்போது அங்கிருக்கிற ஒரு இலட்சம் தமிழர்களைக் கொன்று குவித்து, அவர்களை ருசி கண்டது போதாது என்று, தமிழகத்திலிருந்து பிழைக்கச் சென்ற தமிழர்களையும் (மணியடிக்கப்பெற்றது) அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள்.

திரு. தி. வேல்முருகன்: தாய்த் தமிழ்நாட்டின் தமிழர்களையும் கொன்று குவித்திருப்பதற்கு, அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(ஆ) தமிழகத்தில் வழங்கியுள்ள குடும்ப அட்டைகளில் 1.66 இலட்சம் போலியானவை என்று எல்காட் நிறுவனம் தெரிவித்துள்ளதாக வந்த செய்தி–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழகத்தில் வழங்கப்பட்டுள்ள சுமார் 2 கோடி ரேஷன் அட்டைகளில், 1.66 இலட்சம் ரேஷன் அட்டைகள் போலியானவை என்று 'எல்காட்' நிறுவனம்மூலம் தெரியவந்துள்ளது